**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு ஜீலை திங்கள் 30-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** “ சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்”

**பொருள்:** ஒருவன் சொல்ல விரும்பினால், சொற்களில் பயன்தரும் சொற்களையே சொல்லுதல் வேண்டும். சொற்களில் பயன்தராத சொற்களை எக்காலத்தும் சொல்லாது ஒழிதல் வேண்டும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.
(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

### 1) சி.டபிள்யு.3 / 1436 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 26.06.2008ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .464**
**பதிவு செய்யப்பட்டது.**

### 2) சி.டபிள்யு.3 / 0478 / 2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 07.07.2008ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .465**
**பதிவு செய்யப்பட்டது.**

**3) சி.டபிள்யு.3 / 0883 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 10.7.2008ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .466**
**பதிவு செய்யப்பட்டது.**

**4) மபொ.5 / ம.எ.1269 / 07-08**

மதுரை மாநகராட்சி மையப்பொறியியல் பிரிவு வார்டு எண் 59, வில்லாபுரம் மெயின்ரோடு ஆர்ச் தெரு முதல் வில்லாபுரம் கிழக்குத்தெரு மற்றும் காமராஜர் தெருக்களில் தார்சாலை அமைக்கும் வேலைக்கு 2007-08 ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.24,90,000/- க்கு (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து தொன்னூயிரம் மட்டும்) மதிப்பீடு விலை தயாரிக்கப்பட்டு மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பட்டன. அதில் M/S MAK கன்ஸ்ட்ரக்ஸன் 470B, முதல் மேற்கு குறுக்குத்தெரு, கே.கே.நகர் மதுரை -20 என்ற நிறுவனத்தாரின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.05% குறைவாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. எனவே முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .467**
**பின்னேற்பு செய்து குறிப்புக் கொள்ளப்பட்டது.**

**5) மபொ.5 / ம.எ.1302 / 07-08**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வார்டு எண்.53, அனுப்பானடியில் உள்ள நவீன ஆடுவதை செய்யும் இடத்திற்கு தலவாட சாமான்கள் கொள்முதல் செய்யும் வேலைக்கு 2007-08 ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.24,10,000/-க்கு (ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட மதிப்பீடு மாமன்ற தீர்மானம் எண் 289, நாள் 25.01.08ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பட்டன. அதில் M/S Chennai Abattor Private Limited, 1, Venkateswara nagar, Valasaravakkam, Chennai-87 என்ற நிறுவனத்தின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 8.60% கூடுதலாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் விலை குறைப்பு கோர மதிப்பாய்வு குழுவில் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 4.99% கூடுதலாக செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளதை மதிப்பாய்வு குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .468**
**பின்னேற்பு செய்து குறிப்புக் கொள்ளப்பட்டது.**

**6) மபொ.5 / ம.எ.1303 / 07-08**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வார்டு எண்.53, அனுப்பானடியில் உள்ள நவீன ஆடுவதை செய்யும் இடத்திற்கு தானியங்கி கன்வேயர் பெல்ட் மற்றும் ஊக்கு கொக்கி அமைக்கும் வேலைக்கு 2007-08 ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.25,00,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஐந்து லட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட மதிப்பீடு மாமன்ற தீர்மானம் எண் 289, நாள் 25.01.08ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பட்டன. அதில் M/S Chennai Abattor Private Limited, 1, Venkateswara nagar, Valasaravakkam, Chennai-87 என்ற நிறுவனத்தாரின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 8.60% கூடுதலாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் விலை குறைப்பு கோர மதிப்பாய்வு குழுவில் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 4.99% கூடுதலாக செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளதை மதிப்பாய்வு குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை துவங்கும் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .469**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 7) B30 /41420 / 07

மதுரை மாநகராட்சியில் நான்கு மண்டல பொறியியல் பிரிவுகளிலும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி ஒப்பீட்டு பட்டியல் சரிபார்க்கும் பணி மற்றும் வரைபடங்கள் தயாரிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளவும்,மாநகராட்சி நீச்சல் குளத்திற்கு தேவையான பெண் பயிற்சியாளர் மைய அலுவலகத்திற்கு தேவையான கணிப்பொறி உதவியாளர்கள் ஆகிய பணியாளர்கள் போதுமான அளவு இல்லையென்பதால் கீழ்காணும் பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் ஓராண்டு காலம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08ம் ஆண்டு தினக்கூலி விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ.19,88,000/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) க்கு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் (தீர்மானம் எண்.262, நாள்:27.12.07) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது அதன்பேரில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை பெற விளம்பரம் வெளியிட்டும் இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதன்பேரில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதிக்கு மதிப்பாய்வு குழுவுக்கு வைக்கப்பட்டதில் தொழில்நுட்ப தகுதிக்கு சான்றுகள் வைக்கப்படாத ஒரு ஒப்பந்தப்புள்ளியை தள்ளுபடி செய்து மீதம் உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளி (B கவர்) விலைப்புள்ளி கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன் பேரில் இரண்டு விலைப்புள்ளி கவர் திறக்கப்பட்டு விலைப்புள்ளிகள் மதிப்பாய்வு குழுவிற்கு வைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்தக்காரர் M/s. இன்ட்ஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ (க.எண் 8241, மேலப்பொன்னகரம் 8வது தெரு மதுரை-625016) அவர்களது கீழ்காணும் விலை விகிதத்தை ஏற்றுக் கொள்ளலாம் என மதிப்பாய்வு குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பாய்வுக்குழு தீர்மானத்தின்படி ஷை நிறுவனத்தாரின் விலை விகிதம் தந்துள்ளதை ஏற்று ஒப்பந்த அடிப்படையிலான கீழ்காணும் பணியாளர்கள் ஓராண்டு காலம் சப்ளை பெறுவதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று 18.06.08ல் சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எ | பணியாளர் | எண்ணிக்கை | ஊதியம் |
|---|---|---|---|
| 1 | கணிப்பொறி உதவியாளர்கள் | 12 நபர்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 105/- |
| 2 | நீச்சல் பயிற்சியாளர் (பெண்) | 1 நபர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 135/- |
| 3 | தொழில் நுட்ப உதவியாாள் | 51 நபர்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. /- |

**மாமன்ற தீர்மானம் எண் .470**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 8) B30 /00147 / 08

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான வயர்மேன் மற்றும் ஹெல்பர் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை என்பதால் வயர்மேன் 28 நபர்கள் மற்றும் எலெக்ட்ரிக்கல் உதவியாளர் 1 நபரை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08ல் ஆண்டு தினக்கூலி விகிதத்தில் மதிப்பீடு ரூ.11,48,400/-(ரூபாய் பதினோறு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து நானூறு மட்டும்) க்கு மதிப்பீடு தயாரித்து மதிப்பீடு ஒப்புதலுக்கும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கலாம் என்பதற்கும் மாமன்றத்தின் தீர்மானம் எண் 290 நாள் 25.01.08 ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும் இணைய தளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்பேரில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதிக்கு மதிப்பாய்வுக்குழுவில் வைக்கப்பட்டதில் தொழில்நுட்ப சான்றுகள் வைக்கப்படாத ஒரு ஒப்பந்தப்புள்ளியை தள்ளுபடி செய்து மீதம் உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளி கவர் (B கவர்) விலைப்புள்ளி திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்பேரில் இரண்டு விலைப்புள்ளி கவர் திறக்கப்பட்டு விலைப்புள்ளி மதிப்பாய்வுக்குழுவில் வைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள L1 ஒப்பந்தத்தாரர் M/s. இன்டஸ்டரியல் செக்யூரிட்டி (க.எண்.82.41) மேலப்பொன்னகரம் 8வது தெரு, மதுரை -625016) அவர்களது விலை விகிதத்தை ஏற்றுக்கொள்ளலாம் என மதிப்பாய்வுக்குழு முடிவு செய்யப்பட்டுள்ளது.

1) மேற்கண்ட மதிப்பாய்வுக்குழு தீர்மானத்தின்படி & நிறுவனத்தாரின் விலைவிகிதம் தந்துள்ளதை ஏற்று ஒப்பந்த அடிப்படையிலான கீழ்காணும் பணியாளர்கள் ஓராண்டு காலம் சப்ளை பெறுவதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று 18.06.08ல் சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண் | பணியாளர் | எண்ணிக்கை | ஊதியம் |
|---|---|---|---|
| 1 | மின் கம்பியாளர்கள் | 28 நபர்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 130/- |
| 2 | மின் கம்பி உதவியாளர் | 1 நபர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 130/- |

**மாமன்ற தீர்மானம் எண் .471**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 9) HF1 /21880/ 08

மதுரை மாநகராட்சி நகர் நலப் பிரிவு, செல்லூர் மகப்பேறு மருத்துவமனையில் குழந்தைகள் காப்பகத்தில், குழந்தைகளுக்கு உணவு தயாரித்து வழங்குவதற்கு பல ஆண்டுகளுக்கு ரூ.300/- (Imprest) வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய விலை விகிதத்தில் உணவுப்பொருட்கள் தயாரிக்க போதுமானதாக இல்லை. எனவே, செல்லூர் மகப்பேறு மருத்துவமனை குழந்தைகள் காப்பகத்திற்கு (Imprest) தொகையாக ரூ.1,000/- ஆக அதிகரித்து வழங்குவதற்கு மாமன்றக்கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .472**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 10) மநி3 /17413/ 08

கோயம்புத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு (Tamil nadu Institue of Urban Studies) அரசாணை எண்.126, நாள் :13.05.1996 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படி மதுரை மாநகராட்சியிலிருந்து 2006-2007-ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்திர பங்குத்தொகையான ரூ1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .473**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 11) மே.ம.பொ.1 /18637/ 08(11)

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு 22 – புட்டுத்தோப்பில் இருக்கும் ஸ்ரீபழனிச்சாமி மடம் மேற்படி சிவநாரயண தேசிய சுவாமிகள் என்கிற ஸ்ரீபழனி நாச்சிமுத்து சுவாமிகளின் ஜீவ சமாதி கோவிலுக்கு மாநகராட்சி மூலம் இலவச குடிதண்ணீர் குழாய் இணைப்பு ஒன்று மட்டும் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .474**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 12) CW3 /34162/ 2006

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணாமாளிகை வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு.யூ.வி.மீனாட்சி சுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் (ஈகோ பார்க்) வணக்கத்திற்குரிய மேயரின் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால் ஏற்கனவே வழங்கி வரும் சேவை கட்டணம் அடிப்படையில் 01.10.2007 முதல் 30.09.2008 வரை ஓராண்டிற்கு மாமன்ற தீர்மானம் எண் 206/26.10.2007 முதல் பழைய விகிதத்திலேயே (Old Rates) தொடர்ந்து சென்னை டெஸ்கோ நிறுவனத்திற்கு காசோலைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொது (முன்னாள் ராணுவத்தினர்) துறை public (Ex Serviceman) Department அரசாணை எண் 1740/05.11.2007-ல் 01/10/2007 முதல் புதிய விகிதத்தில் ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை பார்வைக்கு வைக்கப்படுகிறது.)

எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேற்படி அரசாணையின்படி, 01.10.2007 முதல் புதிய விகிதத்திலேயே தொடர்ந்து வழங்கவும், மேலும் 01.10.2008 to 30.09.2009 வரை மேலும் ஓராண்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக டெக்ஸ்கோ பணியாளரின் சேவையை பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை ஏற்று கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு**

1. ஏற்கனவே 30/09/2008 முடிய சேவை செய்யவும் அதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும் மாமன்ற தீர்மான எண்.206/ நாள்:**26.10.2007** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்ற ஆண்டிற்கான மொத்த செலவு ரூ.78,312/-
2. 1.10.2008 முதல் ஒரு வருடத்திற்கு மேற்கண்ட சேவையை நீடிப்பு செய்து கொள்ள ஒப்பந்த பத்திரம் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.
3. பொது(முன்னாள் ராணுவத்தினர்) துறை public (Ex Serviceman) Department அரசாணை எண் 1740/05.11.2007 முதல் புதிய விகிதத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டதின் 01.10.2007 முதல் ஆகும் கூடுதல் செலவு ரூ.25,968/-.
4. 1.10.2008 முதல் 30.09.2009 முதல் சேவை கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.6796/- மற்றும் வரிகள் உட்பட மாதம் ஒன்றுக்கு ரூ.8690/-வீதம் ஆண்டிற்கு ரூ.1,09,280/-செலவு ஏற்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் .475**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

## 13) H1 /5662/ 08

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரத் துறையைச் சார்ந்த மொத்தம் 18 மருந்தகங்களுக்கு 2008-2009-ம் ஆண்டிற்கு தேவையான மருந்துகள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பட்டியலில் கண்டுள்ள படி மருந்தகளின் உத்தேச செலவு ரூ.21,00,000/- (ரூபாய் இருபத்தியொரு இலட்சம்) ஆகும். எனவே, மேற்காணும் தொகைக்கு மருந்துகள் வாங்கவதற்கு மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .476**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

## 14) H1 /20680/ 08

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரத் துறையைச்சார்ந்த மொத்தம் 17 நலவாழ்வு மையங்களுக்கு 2008-2009-ம் ஆண்டிற்கு தேவையான மருந்துகள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பட்டியலில் கண்டுள்ள படி மருந்துகளின் உத்தேச செலவு ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு இலட்சம்) ஆகும். எனவே மேற்காணும் தொகைக்கு மருந்துகள் வாங்குவதற்கு மாமன்றக்கூட்டத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .477**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

## 15) H1 /20681/ 08

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரத் துறையை சார்ந்த மொத்தம் 16 மகப்பேறு மனைகளுக்கு மையங்களுக்கு 2008-2009-ம் ஆண்டிற்கு தேவையான மருந்துகள் வாங்குவதற்கு பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டியலில் கண்டுள்ளபடி மருந்துகளின் உத்தேசச் செலவு ரூ.24,00,000/- (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சம்) ஆகும். எனவே, மேற்காணும் தொகைக்கு மருந்துகள் வாங்குவதற்கு மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .478**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 16) HF1 /20682/ 08

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதாரத்துறைச் சார்ந்த இராயலு அய்யர் மற்றும் EOC அறுவை சிகிச்சை நிலையத்திற்கு **2008–2009–ம்** ஆண்டிற்கு தேவையான மருந்துகள் வாங்குவதற்கு பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது மேற்படி பட்டியலில் கண்டுள்ள படி மருந்துகளின் உத்தேச செலவு ரூ.1,20,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம்) ஆகும். எனவே, மேற்காணும் தொகைக்கு மருந்துகள் வாங்குவதற்கு மாமன்றக்கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .479**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது**

## 17) JnS4 /1770/ 08

மதுரை மாநகராட்சி, அறிஞர் அண்ணா மாளிகை, மைய அலுவலத்தில் மூன்றாம் தளத்தில் அமைந்துள்ள, ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டப் (**JnNURM**) பிரிவு அலுவலகத்திற்கு மின்வசதி, மற்றும் அலுவலக தளவாட சாமன்கள் ( **Office Furnitures)** வசதி ஆகியவற்றை ஏற்படுத்த **ரூ. 24,00,000/-** ( ரூபாய் இருபத்தி நான்கு லட்சம் மட்டும் )க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு **23.01.08**ந் தேதி முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளி ( **Tender )** வரவழைக்கப்பட்டது. **13.03.08**ந் தேதியன்று வரப் பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு டெண்டர்கள் திறக்கப்பட்டதில்,

**M/s. Yogaa And Co,** 1/354-2, Ramasamy Nagar, Thirumalpuram, Madurai – 14 நிறுவனம் மற்றும் **J.F. Javdi Hussain B.E, Civil Engineer & Contractor** 406 / 206, South Mareet Street, Madurai – 1, ஒப்பந்தக்காரர் ஆகியோரின் டெண்டர்களில் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட அனைத்து இனங்களையும் குறிப்பிடாமல், சில இனங்களை மட்டும் குறிப்பிட்டு குறைந்த மதிப்பீடு சமர்ப்பித்ததால், பொதுப் பணித்துறை நிர்ணயித்துள்ள குறியீட்டின்படி, **( P W D Specification And Rates ) 04.07.08**ந் தேதி மறு டெண்டர் வரவழைக்கப்பட்டது.

மேற்படி **04.07.08**ந் தேதிய மூடி முத்திரையிடப்பட்ட மறு ஒப்பந்தப் புள்ளிகள் **( Retenders )** திறக்கப் பட்டதில் கீழ்க்கண்ட விலை விகிதம் தரப்பட்டுள்ளது.

| வ. எண் | | நிறுவனத்தின் பெயர் | டெண்டர் தொகை | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | L - 1 | M/s. Sahara<br>Engineering India ( Pvt ) Ltd<br>Kamarajar 4th Street,<br>Chinna Chokkikulam,<br>Madurai | Rs. 24,73, 291/- | + 4.72 % அதிகம் |
| 2 | L - 2 | Jf. Javid Hussain<br>206A, South Mareet Street,<br>South Gate, Madurai | Rs.24,94,770 /- | + 5.63 % அதிகம் |

மேற்படி இரண்டு விலைப் புள்ளிகளும், மதிப்பீடு விலை விகிதத்தை விட கூடுதலாக கொடுத்துள்ளன. அதில் L -1. **M/s. Sahara Engineering India ( Pvt ) Ltd** Madurai நிறுவனம் ( **4.72 % )** L – 2. **Jf. Javid Hussain, Engineer & Contractor, ( 5.63 % )** விலைப் புள்ளியைக் காட்டிலும் குறைவாக விலைப் புள்ளி கொடுத்துள்ளதால் மேற்படி L -1. **M/s. Sahara Engineering India ( Pvt ) Ltd**, நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளி விலை விகிதத்தை ஏற்று **ரூ.24,73,291/-** ( ரூபாய் இருபத்தி நான்கு லட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்தி இருநூற்றி தொண்ணூற்று ஒன்று) **(+ 4.72% )**க்கு மேற்கண்ட பணி செய்ய வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .480</u>**
**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது</u>**

**18) Jn.S4 /36069 /07**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், பணிகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களுக்கு மத்திய அரசு, மாநில அரசின் நிதி பெறப்பட்டு வங்கிகளில் கணக்கு வைக்கப்பட்டு, செலவினங்கள் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டப்பணிகளுக்கு செலவாகும் செலவீனங்கள், சரிபார்க்க உடனுக்குடன் தணிக்கை செய்வது அவசியம் என கருதி, தணிக்கை ஆய்வாளர்களை அயற்பணி நிமித்தம் நியமனம் செய்ய இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை அவர்களுக்கு கடிதம் வைக்கப்பட்டது. இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, சென்னை உத்தரவு எண். ப& நி1 (3) / 10789/2008-1 நாள் : 17.3.2008 உத்தரவின்படி, திரு.எஸ்.முத்துக்குமார், தணிக்கை ஆய்வாளர் மற்றும் திரு.கோ.ஜெகநாதன், துணை ஆய்வாளர் ஆகியோர் JnNURM பிரிவிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அன்னார்களை அயற்பணி நிமித்தம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணியில் அமர்த்தி கொள்ளப்பட்டது.

மேற்படி, தணிக்கை ஆய்வாளர், துணை ஆய்வாளர் ஆகியோருக்கு 2008/09 ஆம் ஆண்டில் வழங்க வேண்டிய ஊதியம், படிகள், பஞ்சப்படி உயர்வுத் தொகை மற்றும் நிலுவைகள் ஆகியவற்றின் உத்தேச செலவினம் ரூ.3,50,000./ (ரூபாய் மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் ) வருகிறது. மேற்படி செலவீனத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் A&O&M (நிர்வாக செலவீனம்) ஒதுக்கீட்டு தொகையிலிருந்து செலவு செய்யவும், அதற்கான அனுமதியை அரசிடமிருந்து பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**<u>மாமன்ற தீர்மானம் எண் .481</u>**
**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது</u>**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **30.07.2008**

* * * * * * *

**கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008**ம் ஆண்டு ஜீலை திங்கள் **30-ம்** நாள் புதன்கிழமை காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

1) **சி.டபிள்யு.2 / 39182 / 2006**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 18.07.2008ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .482**
**பதிவு செய்யப்பட்டது.**

2) **ம.நி.1/ 25842 /07**

மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் (கணக்கு) பணியிடத்தில் திரு.கே.கிருஷ்ணகுமார், அவர்களை துணை இயக்குநர் நிலையில் பணியமர்த்தி ஆணையிடப்பட்டுள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ப&நி1(3)/29175/2008, நாள்: 09.07.2008-னை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : அன்னார் இம்மாநகராட்சியில் 23.07.2008 முற்பகல் முதல் உதவி ஆணையாளர் (கணக்கு) ஆக பணியேற்றுள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் .483**
**பதிவு செய்யப்பட்டது.**

3) **ம.நி. 1/26769 /07**

மதுரை மாநகராட்சி நீதி அலுவலர் மற்றும் தலைவர் மேல்முறையீடு தீர்ப்பாயம் பணியிடத்தில் திரு.வி.லெட்சுமணன், சார்பு நீதிபதி அவர்களை பணியமர்த்தி ஆணையிடப்பட்டுள்ள சென்னை உயர்நீதி மன்ற அறிவிக்கை (Notification) எண்.133/2008-னை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 23.07.2008- பணியேற்பு செய்துள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் .484**
**பதிவு செய்யப்பட்டது.**

4) **ம.பொ.6/ம.எண்.703/07.08**

மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.36-ல் வடக்கு பெருமாள் மேஸ்திரி தெருவில் வார்டு அலுவலகம் சுகாதாரப்பிரிவு அலுவலகம் மற்றும் வரி வசூல் மையம் (தரைத்தளம்,முதல்தளம்) கட்டும் வேலைக்கு 2007-2008-ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கு 22,80,000/- லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்ண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் 2008-2009 மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 3.69% சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரார் A.K.ராமமூர்த்தி என்பவரின் டெண்டரை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, பெறப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .485**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

5) **மதி1/27122/08**

மதுரை மாநகராட்சி வார்டு எண் **31–**ல் ஜவஹர்லால் நேரு, நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டமாக (BSUP) அலாவுதீன் தோப்பு காலனி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, இடம் சர்வே வார்டு எண் IV பிளாக் எண்**14**, Ts.No.1453/2, மற்றும் 1463/2-ல் கட்டுப்பட்ட மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு புறம்போக்கு நிலமாகும். மேற்படி இடத்தில் உள்ள **91** வீடுகளுக்கு BSUP திட்டத்தின் கீழ் பணிகள் செய்ய வேண்டியிருப்பதால், **91** வீடுகளுக்கு தகுதியின் அடிப்படையில் பயனாளிகளுக்கு பட்டா வழங்குவதற்கு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .486**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) மதி1/ 26919/08**

மதுரை மாநகராட்சி, கோச்சடை கிராமம், சர்வே எண் 17 மற்றும் 18ல் உள்ள விஸ்தீரணம் 43401.51 ச.அடி பரப்பளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், அலுவலகக் கட்டிடம் கட்ட தானமாக வழங்குமாறு நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண் 2403/2008/அ1, நாள்:24.07.08ல் கோரப்பட்டுள்ளது.

மேற்படி, இடம் கோச்சடை கிராமம் சர்வே எண் 17மற்றும் 18ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விஸ்தீரணம் 43401.51 பரப்பளவுள்ள இடத்தினை நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு தானமாக அரசின் ஒப்புதலைப் பெற்று வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் .487**

**பிற்காலத்தில் இந்த இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் என அனைத்து கட்சி மாமன்ற தலைவர்களும் கருத்து தெரிவித்திருப்பதால் இந்த இடத்தை மீண்டும் நேராய்வு செய்து நன்கு பரிசீலனை செய்து மீண்டும் மாமன்றக் கூட்டத்தில் வைக்க வேண்டியது.**

**7) மதி1/ 23518/08**

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு கட்டுப்பட்ட மதுரையில் உள்ள அருள்மிகு கூடலழகர் திருக்கோவில் வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக திருப்பரங்குன்றம் சாலையும், மேலவடம் போக்கி தெருவும் சந்திக்கும் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இந்து சமய அறநிலையத் துறை இலாக்காவினரால் நுழைவு வாயில் அமைக்க அனுமதி வழங்குமாறு உதவி ஆணையாளர் செயல் அலுவலர் (கூ.பொ) ந.க.எண் 62/2008/அ3, நாள்:30.05.08-ல் கோரியுள்ளார்.

மேற்படி, மேலவடம் போக்கி தெரு, திருப்பரங்குன்றம் சாலை சந்திக்கும் இடத்தில் நுழைவு வாயில் (ஆர்ச்) சுமார் 18'அடி உயரத்தில் அமைக்க அனுமதிக்குமாறு கோரப்பட்டுள்ளது. உத்தேச கட்டுமான வேலை ஆரம்பிக்கவில்லை. நுழைவு வாயில் அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**நிபந்தனைகள்:**

1. நுழைவு வாயில் அமைத்தபின் பராமரிக்கும் பணி திருக்கோவில் நிர்வாகத்தினரே செய்ய வேண்டும்.
2. போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அதைத்துக்கொள்ள வேண்டும்.
3. காவல்துறை அனுமதி பெறப்படவேண்டும்.

**மாமன்ற தீர்மானம் எண் .488**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) N.E.5/14459/08**

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.13, திருமுக்குளம் வடக்கு தெரு, தல்லாகுளம், சின்ன சொக்கிகுளம் ஸ்ரீ.நவநீத கிருஷ்ணன் ஸ்ரீசக்கரத்தாழ்வார் கோவிலுக்கு நல்ல தண்ணீர் வசதி இல்லாததாலும் இக்கோயிலுக்கு சாமி தரிசனம் செய்வதற்கு ஆயிரணக்கணக்கான மக்கள் வருவதாலும், மேற்கண்ட கோவிலுக்கு இலவச குடிநீர் இணைப்பு வேண்டி மேற்படி கோவிலின் நிர்வாக கமிட்டி தலைவரின் மனுவினை பரிசீலித்து திருமுக்குளம் வடக்கு தெரு தல்லாகுளம் ஸ்ரீநவநீதகிருஷ்ணன் ஸ்ரீசக்கரத்தாழ்வார் திருக்கோயிலின் பெயரில் ½ அளவு கருவியுடன் இலவச குடிநீர் இணைப்பு அமைக்க அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .489**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 9) Jns.6/2383/2008

மதுரை மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டத்தில் சமுதாய பங்கேற்பு நிதியின்கீழ் அரசு சாரா தொண்டு நிறுவனம் மூலமாக குடிசை வாழ் மக்களுக்கு ரூ.10.00 லட்சங்களுக்குள் சிறு திட்டங்கள் நிறைவேற்ற கீழ்கண்ட திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொண்டு நிறுவனத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | வாய்க்காலில் உள்ள திட்டக்கழிவுகளை அகற்றுதல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் | செல்லூர் வட்டாரக் களஞ்சியம் | 9.50 லட்சம் |
| 2. | குடிசை வாழ் மக்களுக்கு தகவல் மையம் அமைக்கும் திட்டம் | ஜெய்ஹிந்த்புரம் வட்டாரக் களஞ்சியம் | 9.50 லட்சம் |
| 3 | திடீர் நகர் குடிசை பகுதிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் | திடீர் நகர் வட்டாரக் களஞ்சியம் | 9.50 லட்சம் |

மேற்படி மூன்று திட்டங்களுக்கு மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சகம் 04.01.2008 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசாணை எண் (2D)எண்.104, நாள் :**4.7.2008** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணை பிறப்பித்துள்ளது, மேற்படி மூன்று திட்டங்களுக்கு பிறப்பிக்கப்பட்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .490**

**பதிவு செய்யப்பட்டது.**

## 10) ம.பொ.4/27273/2008

மதுரை மீனாட்சியம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள மத்திய காய்கறி சந்தை (சென்ட்ரல் மார்க்கெட்) பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் மேற்கண்ட மத்திய காய்கறி சந்தையை நிரந்தரமாக மாற்றுவதற்கு ஏற்கனவே மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு அரசு ஒப்புதலுடன் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பட்டுள்ளது. எனவே, முதற்கட்டமாக மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பில் தற்காலிகமாக கடைகள் அமைக்கவும், சாலை வசதி,குடிநீர் வசதி, மின் வசதி,மற்றும் இதர வசதிகள் மேற்கொள்ளுவதற்காக கீழ்கண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பிளாக் 1 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 2 | பிளாக் 2 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 3 | பிளாக் 3 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 4 | பிளாக் 4 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 5 | பிளாக் 5 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 6 | பிளாக் 6 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 7 | பிளாக் 7 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 8 | பிளாக் 8 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 9 | பிளாக் 9 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 10 | பிளாக் 10 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 11 | பிளாக் 11 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 12 | பிளாக் 12 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 13 | பிளாக் 13 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 14 | பிளாக் 14 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 15 | பிளாக் 15 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 16 | பிளாக் 16 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 17 | பிளாக் 17 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 18 | பிளாக் 18 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 19 | பிளாக் 19 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 20 | பிளாக் 20 ல் – 27 கடைகள் அமைத்தல் | 24.90 |
| 21 | பிளாக் 21 ல் – 2 கடைகள் அமைத்தல் | 2.00 |
| | மொத்தம் | 500.00 |

மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதலும் மேற்கண்ட திட்டத்திற்கு ஏற்படும் செலவுத்தொகை உள்ளூர் திட்டக்குழுமத் திட்ட மானியமாகவோ அல்லது மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .491**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 11) Jns2/21387/08

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் பாதாளச்சாக்கடை அமைத்தல் மற்றும் பழைய சாக்கடை பகுதிகளை புதுப்பித்தல் மற்றும் கழிவுநீர் சுத்தகரித்தல் போன்ற பணிகளுக்கு ரூ.229.34 கோடி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசின் நிர்வாக ஒப்புதலும் நகராட்சி நிர்வாக ஆணையரின் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டது. மாமன்ற தீர்மான எண்.39, நாள்.18.07.07 அன்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அனுமதி அளிக்கப்பட்ட பணிகள் 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. சிப்பம் 1 மற்றும் 2 முறையே அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கும் சிப்பம் 3ல் பழைய பாதாளச்சாக்கடை புதுப்பிக்கும் பணியும் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச்சாக்கடை அமைக்கும் பணியும் ஆகும். முதல் 2 சிப்பங்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மத்திய நகரப்புற மேம்பாட்டு அமைச்சகம் சிப்பம் 3ல் உள்ள விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச்சாக்கடை அமைக்கும் பணிக்கும் பழைய பாதாளச்சாக்கடை பகுதிகளை புதுப்பிக்கும் பணிக்கும் ரூ.125.76/- கோடியும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

சிப்பம் III க்கு முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் 27.03.08 அன்று கேட்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி நாளன்று ஒப்பந்தப்புள்ளி ஏதுவும் பெறப்படவில்லை. மீண்டும் இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் 06.05.08 அன்று கேட்கப்பட்டு இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. எனவே மதிப்பீடு 2008-09 விலை விகிதத்திற்கு மாற்றப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் 09.06.08 அன்று ரூ.135.24 கோடிக்கு பெறப்பட்டது. மூன்றாவது முறையாக 16.07.08 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இம்முறை கீழ்க்கண்ட ஒரே ஒரு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

1,M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி

M/s. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (Tamil Nadu Water Investment Corporation) விலைப்புள்ளிகளை ஆய்வுச்செய்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்க பணியமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி நிறுவனம் தொழில்நுட்ப தகுதி உடையது என்றும் ஒப்பந்தப்புள்ளி மீதான மேல்நடவடிக்கை தொடரலாம் என ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேற்படி ஆய்வறிக்கை மதுரை மாநகராட்சியால் அமைக்கப்பட்ட திறனாய்வுக்குழுவில் வைக்கப்பட்டது. திறனாய்வுக்குழு மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளிகளை திறக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியது. அதன் அடிப்படையில் 24.07.08 அன்று விலைப்புள்ளி உறை மேற்படி நிறுவனத்தாரின் பிரதிநிதிகள் மற்றும் திறனாய்வுக்குழு உறுப்பினர்கள் திறக்கப்பட்டது. இந்நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்ட விலைவிகிதம் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் விபரம் | M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி |
|---|---|---|
| 1 | மதுரை மாநகராட்சியில் பழைய கழிவுநீர் குழாய்களை புதுப்பிக்கவும் பாதாளச்சாக்கடை விடுபட்ட பகுதிகளுக்கு புதிய கழிவுநீர் சேகரிப்பு குழாய்களை அமைக்கவும். உபகழிவு நீருற்று நிலையத்திலிருந்து தலைமை கழிவு நீருந்து நிலையத்திற்கு செல்லும் உந்து குழாய்களை புதுப்பிக்கவும் உபகழிவு நீருந்து நிலையங்களையும் தலைமை கழிவு நீருந்து நிலையத்தை புதுப்பிக்கவும் | 193,42,43,434.00 (+66.01%) |

மேற்படி நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்ட இவ்விலை விகிதம் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் வழங்கிய விலை விகிதத்தை 66.01% கூடுதலாக கொடுத்துள்ளது. இருப்பினும் ஒப்பந்தப்புள்ளிகள் முதல் இரண்டு அழைப்புகளில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாமல் மூன்றாவது அழைப்பில் பெறப்பட்ட காரணத்தினாலும் மேற்படி நிறுவனத்தாரோடு

விலை குறைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை செய்யலாம் என திறனாய்வுக்குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகளின்படி ஒரே ஒரு விலைப்புள்ளிகள் பெறப்பட்ட காரணத்தினால் மேற்படி நிறுவனத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி விலை குறைப்பு செய்யலாம் என்ற வழிகாட்டுதலின்படி M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி நிறுவனத்தாரிடம் 28.7.08 அன்று நடத்தப்பட்டது. இந்நிறுவனம் இத்திட்டத்தில் பாதாளச்சாக்கடை போடப்பட்ட பகுதிகளில் சாலை சீரமைப்பு பணி இத்திட்டம் நிறைவுற்றப்பின் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இதை நிறைவேற்றும்போது தார் மற்றும் சாலை கட்டுமான பொருட்களில் சந்தை விலை விகிதம் கூடுதலாக இருக்கும் என்கின்ற காரணத்தினால் இந்நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 66.01% கூடுதலாக கொடுத்துள்ளதாலும் இப்பணியை தனிப்பிரிவாக பிரிக்கும் பட்சத்தில் தங்களால் விலைக்குறைப்பு செய்ய இயலும் என விளக்கியது.

சிப்பம் 3 ல் சாலை சீரமைப்பு பணி நீங்கலாக மீதமுள்ள பணிக்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.97.09 கோடியாகும். M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி நிறுவனத்தார் கொடுத்துள்ள விலைவிகிதம் ரூ.146.11 கோடி இவ்விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 50.48% கூடுதலாகும்.

மேலும் மேற்படி நிறுவனம் சாலை சீரமைப்பு பணி நீங்கலாக மீதமுள்ள பணிக்கு ரூ.140.00 கோடி என விலை குறைப்பு செய்துள்ளனர். இவ்விலை விகிதம் டெண்டரில் கொடுக்கப்பட்ட விலை விகிதத்திலிருந்து 6.29 (50.48%) லிருந்து 44.19% ஆக ) குறைவாகும். இந்நிறுவனம் விலைக்குறைப்பு செய்வதற்கு சம்மதம் கடிதம் கொடுத்துள்ளது. திறனாய்வுக்குழு மேற்படி நிறுவனத்தின் விலை விகிதத்தை பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளலாம் என தீர்மானித்துள்ளது.

திறனாய்வுக்குழுவின் இத்தீர்மானத்தின் அடிப்படையில் M/s. டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி நிறுவனத்தார் பழைய கழிவு நீர்க்குழாய்களை புதுப்பிக்கவும், பாதாளச்சாக்கடை விடுபட்ட பகுதிகளுக்கு புதிய கழிவுநீர் சேகரிப்பு குழாய்களை அமைக்கவும் உபகழிவு நீருற்று நிலையத்திலிருந்து தலைமை கழிவு நீருந்து நிலையத்திற்கு செல்லும் உந்து குழாய்களை புதுப்பிக்கவும், உபகழிவு நீருந்து நிலையங்களையும் தலைமை கழிவுநீருந்து நிலையத்தை புதுபிக்கவும் (சாலை சீரமைப்பு பணி நீங்கலாக) கொடுத்துள்ள விலை விகிதத்தை ஏற்று மெசர்ஸ் (டி.சி.எல் - எஸ்.இ.டபிள்யு - ஜோதி) நிறுவனத்தார் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தையில் கொடுத்துள்ள விலை விகிதத்தை நகராட்சி நிர்வாக ஆணையரின் தலைமையில் உள்ள தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கிகரிப்புக்குழு ஒப்புதலுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .492</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **30.07.2008**

* * * * * * *

# Out of Agenda

## 1) கிமபொ 6/ 12748/ 08

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் கீழ்கண்ட காலியிடங்களில் கடைகள் கட்டி வாடகைக்கு விட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண் | இடத்தின் பெயர் | கடையின் அளவு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கீழ் மதுரை ஸ்டேஷன் சாலை – மார்க்கெட் அருகில் | 16'x8' | 2 கடைகள் |
| 2 | கீழ் மதுரை ஸ்டேசன் சாலை – பழைய குயவர்பாளையம் சந்திப்பு | 10'x8' | 12 கடைகள் |
| 3 | கேட்லாக் சாலை மார்க்கெட் வளாகம் அருகில் | 10'x12' | 16 கடைகள் |
| | மொத்தம் | | 30 கடைகள் |

**மாமன்ற தீர்மானம் எண் .493**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 2) மபொ7/ ம.எண் 1010/ 08-09

மதுரை மாநகராட்சி வார்டு எண்.27, அரசரடி நீரேற்று நிலையம் பின்புறம் உள்ள காலியிடத்தில் மேற்கு மண்டலத்திற்கான அலுவலக கட்டிடம் கட்ட மதிப்பீடு ரூ.25.00 (பிளாக் -1) லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு உரிய தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கான மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .494**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 3) மபொ3/ 1003/ 08-09

மதுரை மாநகராட்சி வார்டு எண் 16ல் உள்ள செல்லூர் மார்க்கெட் சிறப்பு மராமத்து வேலை செய்ய 2008-09 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.24,50,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலும் மற்றும் ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட செல்லூர் மார்க்கெட் சிறப்பு மராமத்து பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை உரிய முறையில் டெண்டர் வரவழைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .495**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 4) சி.டபிள்யு 1/ 25357 / 08

மதுரை மாநகராட்சி 54வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.டி.அமுதா கடந்த 30.04.08, 28.05.08 மற்றும் 27.06.08 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்றக்கூட்டங்களில் கலந்துக்கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60ல் சொல்லப்பட்டுள்ளவைக்குட்டு ஷை சட்டம் பிரிவு 57(1) (கே)-ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர் கடைசியாக கலந்துக் கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றதில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்துக் கொள்ளமால் இருப்பாராயின். அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4) ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துக்கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து மாமன்றத்தின் முடிவை கோரும் ஆணையாளின் குறிப்பு.

குறிப்பு : மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4) ல் ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதன் பேரில் இம்மான்றம் அவ்வாறான ஒருவர் மீது மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .496**
**இந்த மாமன்ற உறுப்பினர் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாக தெரிவிப்பதால், இம்மாமன்றம் Condolenece செய்து இவரை தகுதி இழப்பிலிருந்து விலக்களித்து, இவர் மாமன்ற உறுப்பினராக தொடர்ந்து நீடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**5)** **<u>மபொ 4 / 21994 / 08</u>**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையின் தரைத்தளத்தில் உள்ள கருவூலப்பிரிவின் தென்புறம் 24’6” x 28’6” என்ற அளவுள்ள இடத்தை தென்னக ரயில்வே துறையின் முன் பதிவு செய்யும் பணிக்கென ஒதுக்கீடு செய்யலாம் மேற்கண்ட இடத்தை வாடகை அடிப்படையில் ரயில்வே துறையினரே தங்களது சொந்த செலவில் மாநகராட்சி பொறியாளர் முன்னிலையில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .497</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 30.07.08**

* * * * * * *